**செ. கு. எண்: 002** **நாள்: 04.01.2020**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 4.1.2020</u>

சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், பெருங்குடி கிராமத்தைச் சேர்ந்த திருமதி ராதா என்பவரின் கணவர் திரு. வேலு என்பவர் ஒகேனக்கல் சென்ற போது, காவேரி ஆற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், மம்சாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அய்யனார் என்பவரின் மகன் திரு. ராஜேந்திரன் என்பவர் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம், நாச்சிக்குப்பம் கிராமத்தில், சுற்றுலா சென்ற இடத்தில் விளையாடிக்கொண்டிருந்த மாணவிகள் செல்வி சித்ரா, செல்வி அனுஷ்கா மற்றும் செல்வி ஏசுப்பிரியா ஆகிய மூன்று நபர்கள் குப்தா ஆற்றில் தேங்கியிருந்த தண்ணீரில் எதிர்பாராத விதமாக மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், பெரியசாமிபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. தேவதிரவியம் என்பவரின் மகன் திரு. ஜஸ்டின் என்பவர் கடலில் மீன் பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, எதிர்பாராத விதமாக கடலில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், எட்டையாபுரம் வட்டம், எம்.குமரெட்டியபுரம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி மிக்கேலம்மாள் என்பவர் எதிர்பாராத விதமாக கிரசர் இயந்திரத்தில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், கொல்லஞ்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்லக்கண் என்பவரின் மகன் திரு. சிசுபாலன் என்பவர் மரம் விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், ஆவடத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. காமராஜ் என்பவரின் மனைவி திருமதி சாந்தி என்பவர் பேருந்திலிருந்து தவறி விழுந்ததில், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், சலங்கபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராசப்பன் என்பவரின் மகன் திரு. வெங்கிடுசாமி என்பவர் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், தில்லைவிளாகம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பையன் என்பவரின் மகன் திரு. வேதரெத்தினம் என்பவர் மீன் பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், கெங்கலுகண்டிகை கிராமத்தைச் சேர்ந்த திரு. குப்புசாமி என்பவரின் மகன் செல்வன் சந்தோஷ் என்பவர் கிணற்றின் பக்க சுவர் இடிந்து விழுந்ததில், நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், சத்தியமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பழனிக்குமார் என்பவரின் மகன் திரு. யோகேஷ் என்பவர் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், திருவொற்றியூர் வட்டம், சின்ன சேக்காடு, மணலி மற்றும் மாதவரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கண்ணன் என்பவரின் மகன் செல்வன் ஜெயபாரதி, செல்வம் என்பவரின் மகன் செல்வன் தனுஷ் மற்றும் திரு. ராஜா என்பவரின் மகன் செல்வன் சுனில்குமார் ஆகிய மூன்று சிறுவர்கள் கடலில் குளிக்கச் சென்ற போது, கடலில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், கொள்ளுமேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. பச்சியப்பன் என்பவரின் வீடு மின் கசிவு காரணமாக, தீப்பிடித்ததில் தூங்கிக் கொண்டிருந்த அவருடைய மகன் செல்வன் தினேஷ் என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கொந்தகை மேற்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. உதயபிரகாஷ் என்பவரின் மகன் திரு. அபிஷேக் என்பவர் பொய்கை அணையின் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், ஆய்க்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. மாசானம் என்பவரின் மகன் திரு. குத்தாலசங்கரன் என்பவர் கட்டடப்பணியில் ஈடுபட்டிருந்த போது, சிமெண்ட் பீம் உடைந்து விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தென்காசி மாவட்டம், திருவேங்கடம் வட்டம், ரெங்கசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சேதுபதி என்பவரின் மகன் சிறுவன் சந்தோஷ் என்பவர் நாய்கள் கடித்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், பண்டரக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. மகாராஜன் என்பவரின் மகள் சிறுமி பவளவேணி என்பவர் கழிவறைக்கு தோண்டிய பள்ளத்தில் விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ராணிப்பேட்டை மாவட்டம், வாலாசா வட்டம், செட்டித்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்த திரு. மனோகரன் என்பவரின் மகன் இளம்பருதி மற்றும் மருமகள் திருமதி சரஸ்வதி திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுவன் தனுஷ் ஆகியோர் எதிர்பாராத விதமாக நடந்த சாலை விபத்தில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

ராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், ஏரான்துறை பகுதியைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் என்பவரின் மகன் திரு. விஜயகுமார் என்பவர் தனது படகில் தேங்கியிருந்த மழைநீரை அகற்றும் போது, கடலில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த துயரம் அடைந்தேன்.

பல்வேறு விபத்துக்களில் உயிரிழந்த மேற்கண்ட 25 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட துயரச் சம்பவங்களில் **உயிரிழந்த 25 நபர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**